සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம் தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province Department of Education, Southern Province

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

தென் மாகாணக் கல்வித் திணைக்களம்

Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025

இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	07	தமிழ் மொழியும் இலக்கியமும்	කාලය நேரம் Time	02 மணித்.

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

பகுதி - I

- **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01) "போர்த் தொழில் பழகு" என்பதில் போர் என்பதன் ஒத்தகருத்து
1) சமாதானம் 2) அமைதி 3) யுத்தம் 4) ஆரவாரம்

02) "முழு மதியாய் என்றும் வாராயோ?" மதி என்பதன் ஒத்தகருத்து
1) சூரியன் 2) சந்திரன் 3) நட்சத்திரம் 4) வானவில்

03) "பல நாளைக்கு ஆகாரம் ஆயிற்று" ஆகாரம் என்பதன் ஒத்தகருத்து
1) உணவு 2) பழம் 3) சோறு 4) தண்ணீர்

04) "அந்த ஊரினுடைய புகழ் எங்கும் பரவியது" இங்கு புகழ் என்பதன் எதிர்கருத்து
1) பெருமை 2) பாராட்டு 3) இகழ் 4) சிறுமை

05) "பவளவிதழ் திறந்து நகை செய்ய" என்பதில் நகை எனும் சொல்லுக்கு பொருந்தி வராதது
1) சிரிப்பு 2) புன்முறுவல் 3) புன்னகை 4) ஆபரணம்

06) Fax "பெக்ஸ்" என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்
1) மின்னஞ்சல் 2) தொலைநகல் 3) இணையம் 4) தந்தி

07) புத்திரனுக்கு புத்திரி போல - தமையன்
1) தமையள் 2) தமக்கை 3) தமையி 4) தமைச்சி

08) பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயராக அமைவது
1) முதலாளி 2) வானொலி 3) நீர்வீழ்ச்சி 4) ஓடுதல்

09) பின்வருவனவற்றுள் ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவாக அமையும் சொல்
1) தலைவி 2) நோயாளி 3) தேவி 4) தாதி

10) பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்தைக் கொண்ட சொல்
1) விஞ்ஞானம் 2) மாகாணம் 3) சரஸ்வதி 4) மகிழ்ச்சி

11) ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
1) வெள்ளிவிழா 2) பொன்விழா 3) வைரவிழா 4) பவளவிழா

Past Papers Wiki

12) “கவனமாகப் படி” இவ்வாக்கியத்தின் எழுவாய்

1) நீ 2) அவன் 3) படி 4) நான்

13) திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள்

1) 133 2) 10 3) 1300 4) 1330

14) மழை பெய்தது வெள்ளம் ஏற்படவில்லை இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கப் பயன்படும் இணைப்பிடைச் சொல்

1) அதனால் 2) ஆயினும் 3) எனவே 4) அல்லது

15) பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைவது

1) பச்சைப்பசேல் 2) குடுகுடு

3) அருமை பெருமை 3) மெல்ல மெல்ல

16) அடடா எத்தனை புதுமை - இவ்வாக்கியத்தில் இடம்பெற வேண்டிய நிறுத்தற்குறி

1) வியப்புக்குறி 2) வினாக்குறி 3) காற்புள்ளி 4) முக்காற்புள்ளி

17) கடல், சக்கரம், மோதிரம் எனும் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்

1) ஆபரணம் 2) ஆழி 3) சாகரம் 4) தண்ணீர்

18) “உடன் மறைவு” எனும் பொருளைக் குறிக்கும் உவமைத் தொடர்

1) அத்தி பூத்தாற் போல 2) ஏட்டுச் சுரைக்காய் போல

3) கல்மேல் எழுத்துப் போல 4) நீர் மேல் குமிழி போல

19) வினைச் சொல்லின் பண்பில் அடங்காதது

1) காலம் காட்டும் 2) வேற்றுமையை ஏற்கும்

3) ஏவல் பொருளில் வரும் 4) செயலை உணர்த்தும்

20) “வீழ்ந்த ஆலமரம்” எனும் கட்டுரையின் ஆசிரியர்

1) கல்கி 2) கழனியூரான் 3) சி. ஜெயசங்கர் 4) கி.வா. ஜகந்நாதன்

(1 1/2 x 20 = 30 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி - II

- **1 , 2 , 3 ஆம் வினாக்கள் உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

அ) மனிதவாழ்வும் சூழலும்

ஆ) உயிர்கள் மீது அன்பு காட்டுவோம்

இ) பாழடைந்த மாளிகை பேசுகிறது

ஈ) நான் சென்ற சுற்றுலா **(20 புள்ளிகள்)**

02) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து 60 - 75 சொற்களுக்குள் அமையுமாறு எழுதுக.

அ) அகில இலங்கை விளையாட்டுப் போட்டியின் ஓட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்ற உமது நண்பரை வாழ்த்தி ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

ஆ) தாவரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03) பாடநூலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

1) பிள்ளை அழுவதால் பாலுக்கு எலி யாரிடம் சென்றது?
2) விண்ணில் எவற்றுக்கிடையே வெண்ணிலவு விளங்குவதாக கூறப்படுகின்றது?
3) உ.வே. சாமநாதய்யரின் முக்கிய எதிரி எது?
4) தாயினும் தயையுடைய நல்லாள் யார்?
5) சேர மன்னனின் சபைக்கு வந்த புலவர் யார்? **(10 புள்ளிகள்)**

04) பின்வரும் சொற்களில் எவ்வகை புணர்ச்சி இடம் பெற்றுள்ளது எனக் குறிப்பிடுக.

1) கற்குகை	2) மாலைப்பொழுது	3) கலைவிழா
4) மாம்பழம்	5) மரவேர்	6) மட்பாண்டம்
7) மணல் வீடு	8) நீலவானம்	9) பொற்காப்பு
10) நாட்காட்டி		**(1 1/2 x 10 = 15 புள்ளிகள்)**

05) பின்வரும் வாக்கியங்கள் எத்தனையாம் வேற்றுமை என்ன பொருளில் வந்துள்ளது என்பதைக் குறிப்பிடுக.

1) மரத்தை வெட்டினான்
2) பேனையால் எழுதினான்
3) வீட்டைக் கட்டினான்
4) அப்பாவோடு சென்றான்
5) வீட்டைச் சென்றடைந்தான் **(1 1/2 x 10 = 15 புள்ளிகள்)**

06) வாக்கியம் அமைக்குக.

1) எலும்பும் தோலும்
2) சுற்றுச் சூழல்
3) பென்னம் பெரிய
4) அல்லும் பகலும்
5) மட மட
6) அணி அணி
7) கதறிக் கதறி
8) தட்டுத் தடுமாறி
9) ஆடிப்பாடி
10) சரணாலயம் **(1 1/2 x 10 = 15 புள்ளிகள்)**

07) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தென்னை மரக்கிளை மீதில் - அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ்சிறிய குருவி - அது
"ஜிவ்" என்று விண்ணிடை ஊசல் சிட்டேகும்
மன்னப் பருந்தோரிரண்டு - மெல்ல
வட்டமிட்டுப் பின் நெடுந்தொலை போகும்

பின்னர் தெருவிலோர் சேவல் - அதன்
பேச்சிலே "சக்திவேல்" என்று கூவும்
செவ்வொளி வானில் மறைந்தே - இறந்தே
நிலவெங்கும் பொழிந்தது கண்டீர்

(பாரதியார்)

1) பசுங்கிளி எங்கு காணப்பட்டது?
2) குருவி எங்கே சென்றது?
3) சேவல் எவ்வாறு கூவுகிறது?
4) இங்கு இடம்பெற்றுள்ள அடுக்கிடுக்குத் தொடர் எது?
5) பிரித்தெழுதுக.

1) பசுங்களி 2) மரக்கிளை **(3 x 5 = 15 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank